பிரான்சிஸ்கன்
சிலுவை பாதை



புனித பிரான்சிஸ் அசிசி தேவாலயம்,
செராஸ், மலேசியா

சிலுவை பாதை

† தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே. ஆமென்.

தயாரிப்பு பிரார்த்தனை

அனை: **கருணைமிகுந்த இறைவா,
உண்மையுள்ள மனமும் ஆன்மாவும் கொண்டு நான் உம்மை வணங்குகிறேன். மகிமை நிறைந்த இறைவா, உம்மையே என் உயரிய ஆண்டவராக வணங்குகிறேன். உம்மீது நம்பிக்கை வைக்கிறேன், உம்மை எதிர்நோக்குகிறேன், எல்லாவற்றிலும் மேலாக உம்மை அன்பு செய்கிறேன்.**

நான் உம்மை துன்பப்படுத்தியதற்கு முழு மனமுடைந்து வருந்துகிறேன், உயர்வான என் ஒரே ஆண்டவரே, என் வாழ்க்கையை திருத்தி கொள்ள உறுதியுடன் முயற்சிக்கின்றேன்; கருணை பெறுவதற்கு நான் தகுதியில்லாதவராக இருந்தாலும், உம்முடைய தூய சிலுவையை நோக்கி பார்க்கும்போது நான் அமைதியிலும் ஆறுதலிலும் நிரம்புகிறேன்.

உம்முடைய பாடுகளை கண்டு தியானிக்கிறேன். துயர் நிறைந்த உம் தாயாருடனும், என் காவல் தூதருடனும் சேர்ந்து, உம்முடைய மாட்சியை உயர்த்தவும் என் ஆன்மாவை காக்கவும், சிலுவை பாதையில் செல்லப்போகிறேன்.

இதன் பலனை எனக்காகவும், தூய ஆன்மாக்களுக்காகவும் பெற விரும்புகிறேன்.

அன்பான இயேசுவே, என் மனதை உம்முடைய அன்பால் திறந்து, இந்த புனித முயற்சியை முடிந்தவரை சிறப்பாகச் செயலாற்றவும், நான் உம்மோடு வாழவும் மீண்டும் இணையவும் அருள்புரியும்.

ஆமென்.



முதலாம் நிலை
இயேசு தீர்ப்பிடப்படுகிறார்



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **மிகத் தூய்மையான இயேசு, மரணத்திற்கு தண்டிக்கப்படுகிறார். ஆம், அவமானமான சிலுவை மரணத்திற்கு தீர்ப்பிடப்படுகிறார்.**

சீசரின் நண்பராக இருக்க வேண்டும் என்பதற்காக, பிலாத்து இயேசுவை அவருடைய எதிரிகளின் கைகளில் ஒப்படைக்கிறார். ஓ கொடிய பாவமே! தூய்மையான ஒருவரை மரணத்திற்கு தண்டித்து, மனிதர்களை திருப்தி படுத்துவதற்காக இறைவனை எதிர்க்கிறது.

அனை: **தூய்மையான இயேசுவே, நான் பாவம் செய்துள்ளேன், நிரந்தரமான மரணத்தின் பாவி நான்;**
நான் மீட்படைய, நீர், நீதியை மறுக்கும் மரண தீர்ப்பை மகிழ்வுடன் ஏற்றவர்.
ஆண்டவரே, நீர் இல்லை என்றால், நான் இனி யாருக்காக வாழவேண்டும்? மனிதர்களை மகிழ்விக்க விரும்பினால், நான் உன் சீடனாக இருக்க முடியாது.
இயேசுவே, உம்மை மகிழ்விக்க, அனைத்து உலகத்தையும் எதிர்ப்பவனாய் இருப்பேன்!

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிரும்.**

பாடல்

பழிகளைப் சுமத்திப் பரிகசித்தார் – உயிர்
பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார்
பழிகளைப் சுமத்திப் பரிகசித்தார்
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக-2



இரண்டாம் நிலை

இயேசு சிலுவையைச் சுமக்கிறார்



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **“என் மீட்பர் சிலுவையை கண்டு அதனை மிகவும் விரும்பி அணைத்தார். அவர் அதனை அன்புடன் பற்றி, மென்மையாக முத்தமிட்டார், அதனை தன் காயமடைந்த தோள்களில் ஏற்றினார், மிகவும் சோர்வடைந்திருந்தாலும், அதனை மகிழ்ச்சியாக எடுத்துச் சென்றார்.”**

அனை: **“என் இயேசுவே, நான் என் சிலுவையை ஏற்க மறுத்தால் உமது நண்பராகவும் சீடராகவும் இருக்க முடியாது. அன்புக்குரிய சிலுவையே, நான் உன்னை அணைத்து முத்தமிடுகிறேன், என் இறைவனின் கையிலிருந்து மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறேன். என் ஆண்டவரும் மீட்பருமானவரின் சிலுவையை தவிர, மற்ற எதிலும் பெருமை கொள்வது என்னிடமிருந்து தொலைவாக இருக்கட்டும். இதனால் நான் என்றும் உம்மை சேர்ந்தவனாக இருப்பேன்.**

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிரும்.**

பாடல்

தாளாச் சிலுவையைச் சுமக்க வைத்தார் –உம்மை
மாளாத் துயரால் துடிக்க வைத்தார்
தாளாச் சிலுவையைச் சுமக்க வைத்தார்
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக -2



மூன்றாம் நிலை

இயேசு முதல் முறை கீழே விழுகிறார்



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **சிலுவையை சுமந்து சென்ற நம் அன்பான மீட்பர், அதன் கனமான பாரத்தினால் மிகவும் பலவீனமடைந்து, சோர்வுற்று தரையில் விழுந்தார்.**

சிலுவை அவருக்குப் இலகுவானது, இனிமையானது; ஆனால் நம் பாவங்களே அதை மிகவும் கனமாகவும் சுமக்க கடினமாகவும் மாற்றின.

அனை: **அன்பான இயேசுவே, என் பாவங்களின் பாரத்தையும் கனமான சுமையையும் சுமக்கிறவரே, நான் உம்முடன் ஒன்றுபட்டு என் துன்பச் சுமையைச் சுமக்க வேண்டாமா? உமது கட்டளைகளை ஏற்றுக்கொள்ள வேண்டாமா?**

உமது பாரம் இனிமையானது, உமது சுமை இலகுவானது. அதை நான் மனமுவந்து ஏற்றுக்கொள்கிறேன். என் சிலுவையை எடுத்துக்கொண்டு உம்மைப் பின்பற்றுவேன்.

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிரும்.**

பாடல்

விழுந்தீர் சிலுவையின் பளுவோடு – மீண்டும்
எழுந்தீர் துயர்களின் நினைவோடு
விழுந்தீர் சிலுவையின் பளுவோடு
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக-2



நான்காம் நிலை

இயேசு தம் தாயை சந்திக்கிறார்



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **சிலுவையைச் சுமந்து, காயங்களிலும் இரத்தத்திலும் தன் அன்பு மகனை கொடுமையான முறையில் தெருக்களில் இழுத்துச் செல்லப்படுவதைக் காணும்போது, எவ்வளவு துயரமும் வேதனையும் மரியாளுக்குக் ஏற்பட்டிருக்கும்!**

அவரது மென்மையான இதயம் தாங்கி கொள்ள முடியாத வேதனைகளை அனுபவித்தது!

இயேசுவிற்கு பதிலாக தானே மரிக்க வேண்டும் அல்லது குறைந்தபட்சம் அவருடன் சேர்ந்து மரிக்க வேண்டும் என்று அவர் எவ்வளவு ஆவல் கொண்டிருப்பார்.

அனை: **இயேசுவே, மரியாளே, உங்கள் இதயங்களைத் துளைத்த வேதனைகளுக்குக் காரணம் நான் தான். என் இதயமும் உங்கள் துயரங்களில் சிலவற்றையாவது அனுபவித்தால் எவ்வளவு நன்று!**

அம்மா, உமது துயரங்களாளும் உம் மகனின் வேதனைகளாளும், நான் மகிழ்ச்சியான இறப்பின் அருளைப் பெற வேண்டுகிறேன்.

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிரும்.**

பாடல்

தாங்க வொன்னாத் துயருற்றே – உம்மைத்
தாங்கிய அன்னைத் துயருற்றாள்
தாங்கிட வொண்ணாத் துயருற்றே
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக -2



ஐந்தாம் நிலை

சிலுவையைச் சுமப்பதற்கு சீமோன் உதவுகிறார்



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **சீரேன் ஊரை சேர்ந்த சீமோன் சோர்ந்து விட்ட நம் மீட்பரின் சிலுவையை சுமக்க உதவ கட்டாயப்படுத்தப்படுகிறார். சீமோன் தனது சேவையை தாமாகவே வழங்கியிருந்தால் இயேசுவுக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும்!**

ஆனால், நம்மை போல சீமோன் கிறிஸ்துவால் அழைக்கப்பட்டவர் அல்ல. "உங்கள் சிலுவையை சுமந்து என்னை பின்பற்றுங்கள்" என இயேசு கூறுகிறார். எனினும் நீங்கள் ஒத்துழைக்காமல், மனவெறுப்பு கொண்டு சுமக்கிறீர்கள்.

அனை: **இயேசுவே, உன்னை பின்பற்றாமல் தனது சிலுவையை எடுத்துக்கொள்ளாதவர் யாரும் உமக்குப் பொருந்தியவரில்லை . நான் மகிழ்ச்சியுடன் உம்முடன் சிலுவை பாதையில் பயணம் செய்கிறேன். நான் அதனை மரணம் வரை பொறுமையுடன் சுமக்க விரும்புகிறேன், இதனால் உமக்கு முன்னால் தகுதி உள்ளவனாக இருப்பேன்.**

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிரும்.**

பாடல்

மறுத்திட முடியா நிலையாலே- சீமோன்
வருந்தினார் தன்னை உம்மோடு
மறுத்திட முடியா நிலையாலே
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக -2



ஆறாம் நிலை

இயேசுவின் முகத்தை வெரோனிக்கா துடைக்கிறார்.



முதல்: **கிறிஸ்துவே உம்மை**
வணங்கி ஆராதிக்கிறோம்.

அனை: **ஏனெனில் உமது தூய**
சிலுவையால் உலகத்தை மீட்டீர்.

முதல்: **கருணையால் இரக்கப்பட்டு , வெரோனிக்கா இயேசுவின் பாதிக்கப்பட்ட முகத்தை துணியால் துடைக்கிறார் . இயேசுவின் தூய முகம் அதில் அச்சிடப்படுகிறது. இயேசு அதனை மீண்டும் அவரிடமே அளிக்கிறார். கிறிஸ்து நமக்கும் இதுபோல் பதிலளிப்பாரா? அதற்கு நாம் அவருக்கு சேவை செய்ய வேண்டும்.**

“நீங்கள் அடுத்தவர்க்கு கருணையில் செய்யும் ஒவ்வொரு முறையும், அதனை கிறிஸ்துவுக்கே செய்ததாக இருக்கும்.”
ஏனெனில் அவர் கூறுகிறார்: “என் சகோதரர்களில் மிகக் குறைந்தவருக்கு நீங்கள் உதவும்போது, உண்மையில் அதனை எனக்கே செய்தீர்கள்.

அனை: **அன்பின் இயேசுவே,**
நீர் அளித்த எல்லா அருள்கொடைகளுக்கும் நான் உமக்கென்ன கைம்மாறு செய்வேன்?
இதோ, என்னை முழுமையாக உமது சேவைக்காக அர்ப்பணிக்கிறேன். என் முழு இதயத்தையும் உமக்கு அளிக்கிறேன்; நான் ஒருபோதும் உம்மை மறந்துவிடாதபடி, அதில் உமது புனித உருவத்தைப் பதித்து அருளும்.

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிரும்.**

பாடல்

நிலையாய்ப் பதிந்தது உம் வதனம் – அன்பின்
விலையாய் மாதின் சிறு துணியில்
நிலையாய்ப் பதிந்தது உம் வதனம்
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக-2



ஏழாம் நிலை

இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **சிலுவையின் பாரத்தால், இயேசு மீண்டும் தரையில் விழுகிறார். ஆனால் கொடுமை புரிவோர் அவருக்கு ஒரு கணமும் ஓய்வு கொடுக்கவில்லை. அவரை தள்ளி அடித்து மேலும் முன் செல்லத் வலியுறுத்தினார்கள்.**

எவ்வளவு கொடுமையாக இயேசு நடத்தப்படுகிறார், காலடியில் மிதிக்கப்படுகிறார்! என் ஆத்துமாவே, நினைவில் கொள்—உன் பாவங்களே இயேசுவுக்கு இந்த வேதனையை ஏற்படுத்தின.

அனை: **கருணையுள்ள இயேசுவே, என்மேல் இரக்கமாயிறும்.**

என் முந்தைய பாவங்களில் மீண்டும் விழாதபடி எனக்கு உதவி செய்யும். இன்று முதல் நான் மனம் மாறி முயன்று இனி ஒருபோதும் பாவம் செய்யாதிருக்க பாடுபடுவேன்.

இயேசுவே, எனது இந்த தீர்மானத்தை உண்மையுடன் நிறைவேற்றும்படி உமது அருளால் என்னை பலப்படுத்தும்.

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிரும்.**

பாடல்

ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததினால் –
அந்தோ சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும்
ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததினால்
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக-2



எட்டாம் நிலை

இயேசு ஜெருசலேம் பெண்களுக்கு ஆறுதல் சொல்கிறார்



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **இரக்கத்தால் உருகி, ஜெருசேம் பெண்கள் வேதனையுறும் நம் மீட்பருக்காக அழுகின்றனர்.**

ஆனால் இயேசு அவர்களை நோக்கித் கூறுகிறார்: "எனக்காக அழ வேண்டாம்; உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். உங்கள் பாவங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளின் பாவங்களுக்காகவும் அழுங்கள்; அவையே என் வேதனையின் காரணம்."
"நீயும் உன் பாவங்களுக்காக அழ வேண்டும்; ஏனெனில், உன் பாவங்களுக்காக நீயே மனந்திரும்பி சிந்தும் கண்ணீரே உனக்கு மிகவும் பயனுள்ளது."

அனை: **இயேசுவே, இரவும் பகலும் என் பாவங்களுக்காக அழுவதற்கு என் கண்களுக்கு கண்ணீரின் பெரு வெள்ளத்தை அளிப்பவர் யார்?**

உமது இரத்தக் கண்ணீரால் என் இதயத்தை உருகச் செய்யும்; என் கண்களிலிருந்து அளவில்லா கண்ணீர் பொங்கிப் பெருகட்டும். உமது பாடுகளுக்காகவும் என் பாவங்களின் பொருட்டும் மரணம் வரும் வரை நான் கண்ணீரோடு இருக்க அருள் புரியும்.

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிருரும்.**

பாடல்

விழிநீர் பெருக்கிய மகளிருக்கு - அன்பு
மொழி நீர் நல்கி வழி தொடர்ந்தீர்
விழிநீர் பெருக்கிய மகளிருக்கு
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக-2



ஒன்பதாம் நிலை

இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **கல்வாரியின் அடிவாரத்தில் சோர்ந்து, இயேசு மூன்றாம் முறையாக கீழே விழுகிறார்.**

இதனால் அவரது மெல்லிய உடலில் வேதனை அளிக்கும் எல்லா காயங்களும் மீண்டும் திறந்திருக்கும்! இயேசு இவ்வளவு வேதனையுடன் விழுவதற்குக் காரணமான என் பாவங்கள் எவ்வளவு பெரிதானது!

இயேசு என் பாவங்களைத் தம்மீது ஏற்றுக்கொள்ளாதிருந்தால், அவை என்னை நரகத்தின் ஆழ்குழியிலே தள்ளியிருக்கும்.

அனை: **மிகவும் இரக்கமுள்ள இயேசுவே,**

என் பாவங்களிலேயே நான் இறந்து, நரகத்தின் ஆழ்குழியிலே விழாமல் என்னை மீட்டதற்காக ஆயிரமாயிரம் நன்றிகளை உமக்கு செலுத்துகிறேன்.

என் வாழ்க்கையைச் சீர்செய்யும் உண்மையான நோக்கத்தை என்னுள் எழச் செய்யும். நான் இனி ஒருபோதும் பாவத்தில் விழாதபடி காத்தருளும்; இறுதி வரை நிலைத்திருக்க உமது அருளை எனக்கு வழங்கும்.

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிரும்.**

பாடல்

மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர் – கால்
ஊன்றி நடந்திடும் நிலை தளர்ந்தீர்
மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர்
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக-2



பத்தாம் நிலை

இயேசுவின் ஆடைகள் அகற்றப்படுகிறது



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **கல்வாரியை அடைந்தபோது, இயேசுவின் உடைகள் அகற்றப்பட்டன.**

அந்த இரக்கமற்ற செயல் எவ்வளவு வேதனையானதாக இருந்திருக்க வேண்டும்! ஏனெனில் அந்த உடைகள் அவருடைய சிதைந்த உடலோடு ஒட்டிக்கொண்டிருந்ததால், அவற்றை அகற்றும்போது சில இடங்களில் தசைகளும் கிழிக்கப்பட்டது.

இயேசு ஒன்றுமே இல்லாமல் இறக்கும்படி அவருடைய உடைகள் பறிக்கப்பட்டன. நானும் என் தீய பழக்கங்களை விலக்கி வைத்தபின், எவ்வளவு மகிழ்ச்சியாக இறப்பேன்!

அனை: **இயேசுவே, என் வாழ்க்கையைச் சீர்செய்ய எனக்கு உதவி செய்யும். உமது விருப்பத்திற்கு ஏற்ப அது புதுப்பிக்கப்படட்டும்.**

அந்த திருத்தம் எனக்கு எவ்வளவு வேதனையானதாக இருந்தாலும், நான் அதனை விட்டுவிட மாட்டேன்.

உமது அருளின் உதவியுடன், எல்லா பாவமுள்ள இன்பங்களிலிருந்தும் விலகுவேன்; அப்பொழுது நான் மகிழ்ச்சியாக இறந்து நிலை வாழ்வு அடைவேன்.

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிரும்.**

பாடல்

உடைகள் களைந்திட உமை தந்தீர் – இரத்த
மடைகள் திறந்திட மெய் நொந்தீர்
உடைகள் களைந்திட உமை தந்தீர்
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக -2



பதினொன்றாம் நிலை
இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **உடைகள் பறிக்கப்பட்ட நிலையில், இயேசு பலவந்தமாக சிலுவையின் மேல் ஏற்றப்படுகிறார்.**

மிகக் கொடுமையாக அவரது கைகளிலும் கால்களிலும் ஆணிகள் அடிக்கப்படுகின்றன. இயேசுவோ அவருடைய விண்ணகத் தந்தையின் பொருட்டு அமைதியாகவே இருக்கிறார்.

அவர் உனக்காகத் துன்புறுகிறார், ஆனால் நீயோ துன்பங்களையும் சோதனைகளையும் எப்படிச் எதிர்கொள்கிறாய்? எவ்வளவு சீற்றமும் அமைதியில்லாமலும், எத்தனை குற்றம் குறைகள் காண்கிறாய்?

அனை: **இயேசுவே, நீரே பணிவான, பொறுமை மிகுந்த செம்மறி.**

நான் என் அமைதியற்ற தன்மையைச் இனி நிரந்தரமாக விட்டுவிடுகிறேன். ஆண்டவரே, என் உடலை அதன் தீய விருப்பத்திளிருந்தும் பாவத்திளிருந்தும் விடுவித்தருளும். இவ்வுலக வாழ்வில் எனக்கு வேதனையான தண்டனை அளித்தருளும், ஆனால் மறு வாழ்வில் என்னை மீட்டருளும்.

நான் முழுமையாக உமது புனித நோக்கத்தை ஏற்கிறேன், அனைத்திலும் அது நிறைவேறட்டும்.

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிரும்.**

பாடல்

பொங்கிய உதிரம் வடிந்திடவே – உம்மைத்
தொங்கிடச் செய்தார் சிலுவையிலே
பொங்கிய உதிரம் வடிந்திடவே
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக-2



பன்னிரண்டாம் நிலை
இயேசு சிலுவையில் உயிர் நீத்தார்



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **சிலுவையில் மரணமடைந்த இயேசுவை பாரும். உன்னை நேசித்து காயங்களைப் பெற்ற அவரது முழு உருவம் அன்பை காட்டுகிறது.**

அவரது முகம் உம்மை முத்தம் செய்யத் தாழ்ந்து உள்ளது. அவரது கைகள் உம்மை அணைக்க திறந்துள்ளது. அவரது இதயம் உம்மை வரவேற்கத் காத்திருக்கிறது. எவ்வளவு உயர்வான அன்பு! உன்னை நிலையான மரணத்திலிருந்து காப்பாற்ற இயேசு சிலுவையில் மரணத்தை ஏற்கிறார்.

அனை: **அன்பு மிகுந்த இயேசுவே,**

நீர் சிலுவையில் காயங்களால் மூடப்பட்டு, முள் முடி அணிந்திருப்பதைப் பார்க்கும்போது, நான் உலகத்தையும் அதன் வீணான விருப்பங்களையும் வெறுக்க விரும்புகிறேன்.

கருணையுள்ள இயேசுவே, நான் அனைத்து அழிவுக்குறிய பொருட்களையும் வெறுத்து, உம்மோடு மட்டும் வாழவும் இறக்கவும் என்னை உமது காயமடைந்த இதயத்தில் ஏற்றுக் கொள்ளும்.

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிருரும்.**

பாடல்

இன்னுயிர் அகன்றது உமைவிட்டு -பூமி
இருளினில் ஆழ்ந்தது ஒளி கெட்டு
இன்னுயிர் அகன்றது உமைவிட்டு
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக-2



பதிமூன்றாம் நிலை

இயேசுவின் உடல் சிலுவையிலிருந்து இறக்கப்படுகிறது



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **இயேசு மரணம் வரை சிலுவையிலிருந்தார்.**

அவர் உடலை தரையில் இறக்கி, தம் தாயின் மடியில் கிடத்தினார்கள்.

'உன் நல்ல தீர்மானங்களில் நிலைத்திரு, சிலுவையை விட்டு ஓடாதே, ஏனெனில், இறுதிவரை நிலைத்திருப்பவன் தான் காப்பாற்றப்படுவான்".

பலிபீடத்திலிருந்து இயேசுவின் திரு உடலும் திரு இரத்தமும் பெறும் போது, அவர் இதயம் எவ்வளவு தூய்மையானது என்பதை சிந்திப்போம்.

அனை: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

உம்மை நோக்கி மனமார்ந்து வேண்டுகிறேன்: என்றும் நன்மை செய்ய எனக்கு உதவும், நான் உமது சிலுவையை விட்டு பிரியாமல் இருப்பேனாக. ஏனெனில் அந்த சிலுவையில்தான் நான் வாழவும், இறக்கவும் விரும்புகிறேன்.

ஆண்டவரே, நற்கருணையில் உம்மை பெறவும், நாம் என்றென்றும் ஒன்றினைந்து நிலைத்திருக்கவும், தூய்மையான இதயத்தை என்னுள் உருவாக்கும்.

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிரும்.**

பாடல்

துயருற்றுத் துடித்தாள் உளம் நொந்து –
அன்னை உயிரற்ற உடலினை மடி சுமந்து
துயருற்றுத் துடித்தார் உளம் நொந்து
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக-2



பதினான்காம் நிலை
இயேசுவின் உடலை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்



முதல்: **கிறிஸ்துவே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம்.**

அனை: **ஏனெனில் உமது தூய சிலுவையால் உலகத்தை மீட்டீர்.**

முதல்: **இயேசுவின் உடல் ஒரு அந்நியரின் கல்லறையில் வைக்கப்பட்டது.**

இந்த உலகில் அவர் தலை சாய்க்க இடமின்றி நடந்தார், மரணத்துக்குப் பிறகு அவருக்கான தனிப்பட்ட கல்லறை கூட காணப்படவில்லை.

“உலகத்துடன் இன்னும் பிணைந்திருக்கும் இதயமே, அதனுடன் சேர்ந்து அழியாதவாறு அதனை வெறுத்திடு”

அனை: **இயேசுவே, நீர் என்னை உலகத்திலிருந்து தனித்து எடுத்துவிட்டீர், எனவே இனி எனக்கு அதில் என்ன தேடல் உண்டு? நீர் என்னை விண்ணுலக வாழ்வுக்காக உருவாக்கினீர், எனவே மண்ணில் இனி எனக்கு என்ன ஆசை உண்டு?**

பொய்யான உலகே, உன் வீணான ஆசைகளோடு என்னிடமிருந்து விலகி போ! இப்பொழுது என் மீட்பர் எனக்காக அமைத்த சிலுவையின் பாதையில் நடப்பேன், என் வான் வீட்டை நோக்கி முன்னே பயணிப்பேன், அங்கு என் ஓய்வும், என் மகிழ்ச்சியும் நிலையானதாக இருக்கும்.

முதல்: **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே!**

அனை: **எங்கள் மேல் இரக்கமாயிரும்.**

பாடல்

ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு –
நீர் அடங்கிய கல்லறை உமதன்று
ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக-2



பிரான்சிஸ்கன்
சிலுவை பாதை



முதல் : **“நம் திருத்தந்தை, பேராயர் மற்றும் பங்கின் நோக்கங்களுக்காக ஜெபிப்போம்.”**

அனை: **(விண்ணுலகில் இருக்கிற.... அருள் நிறைந்த மரியே... தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக...”)**

நிறைவு ஜெபம்

அனை: **என்றும் வாழும் எல்லாம் வல்ல கருணையுள்ள தந்தையே, வாழ்க்கையின் பாதையில் சிலுவையை சுமந்து முன்னோடியாக செல்வதற்காக மனித இனத்திற்கு உமது அன்பு மகனாகிய பேரருள்மிகு இயேசுவை தாழ்மையின், கீழ்படிதலின், பொறுமையின் உதாரணமாக வழங்கியவரே,**

உமது தூய அன்பால் எங்களை ஒளியேற்றி, அவருடைய நற்செய்தியால் சிலுவையை சுமந்து செல்லும் எங்களுக்கு ஆறுதல் அளித்திடும். கிறிஸ்துவின் உண்மையான சீடர்களாக அவரைப் பின்பற்றி நடப்போம். இதனால் இறுதி நாளில் நாங்கள் அவருடன் மகிமையோடு எழுந்து, தீர்ப்பை மகிழ்ச்சியுடன் கேட்கும் வாய்ப்பு ஏற்படும்.

“என் தந்தையால் ஆசீர்வாதிக்கப்பட்டவர்களே, வருவீர், உங்களுக்காக தயாரிக்கப்பட்ட இறை அரசை உரிமையாக்கிக் கொள்ளுங்கள்,”

அதில் உம் திருமகனுடன் மற்றும் தூய ஆவியுடன் ஆட்சி செய்வீர், மேலும் நாமும் என்றும் உம்மோடு இணைவோம் என நம்பிக்கை கொள்கிறோம்.

ஆமேன்.



† தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே. ஆமென்.

சிலுவை பாதை
சுருக்கமான வரலாறு

பிரான்சிஸ்கன் ஆன்மீக அடிப்படையில் வேரூன்றிய சிலுவையின் நிலையங்கள் (Stations of the Cross) 1221-ஆம் ஆண்டில் புனித நிலத்திலிருந்து புனித பிரான்சிஸ் திரும்பிய பின்னர் தவக்கால வழிபாடுகளில் இணைக்கப்பட்டன. அதன் வழி ஜெருசலேமுக்கு புனித பயணம் செல்ல இயலாதவர்களுக்காக, ஆண்டவரின் துயரம் நிறைந்த பாதையில் நடப்பதன் அருளை, பகிர முயன்றனர்.

13-ஆம் நூற்றாண்டில் ஜெருசலேமின் புனித இடங்களின் பராமரிப்பை பிரான்சிஸ்கன் சகோதரர்களுக்கு ஒப்படைத்தபோது, அவர்கள் கல்வாரிக்கு செல்லும் பாதையை வெளிப்புற சிலுவையின் நிலையங்களால் (Stations of the Cross) குறிக்கத் தொடங்கினர். காலப்போக்கில், அவர்கள் இந்த வழிபாட்டை ஐரோப்பா முழுவதும் மற்றும் அதற்கு புறநாட்டிலும் கொண்டு சென்று, உலகின் ஆலயங்களில் தவக்காலத்தின் பிரபல வழிபாடாக உருவாக்கினர்.

பிரான்சிஸ்கன் சிலுவை பாதையில் ஜெபிப்பது என்பது இயேசுவின் துயரத்தை, தாழ்மையை, மற்றும் கருணையை மனதில் கொண்டு சிந்திப்பது, நம் சிலுவையை அவருடைய சிலுவையுடன் ஒன்றுபடுத்துவதாகும். இந்த பாதையில் நடக்கும் போது, நாம் கிறிஸ்துவிற்கு அருகில் வருகின்றோம், அன்பு, அமைதி, மற்றும் நம்பிக்கையின் பாதையை புதிதாக கற்றுக் கொள்கிறோம்.

"உம்மை ஆராதிக்கின்றோம், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே,
இங்கு மற்றும் உலகத்தின் அனைத்து ஆலயங்களிலும்,
உம்மை வாழ்த்துகிறோம், ஏனென்றால் உமது தூய
சிலுவையால் நீர் உலகத்தை மீட்டீர்." – புனித அசிசி பிரான்சிஸ்



